# ஆகஸ்ட் - 05 - சனி

## உரோமை தூய மரி அன்னை பேராலய அர்ப்பண நினைவு

**கடவுளே! மக்களினத்தார் உம்மைப் புகழ்வார்களாக! மக்கள் எல்லாரும் உம்மைப் போற்றுவார்களாக! திபா. 67:3**

## முதல் வாசகம் : லேவியர் 25: 1,8 – 17

ஆண்டவர் சீனாய் மலையில் மோசேயிடம் கூறியது: தொடர்ந்து வரும் ஏழு ஓய்வு ஆண்டுகளை ஏழேழு ஆண்டுகளாக ஏழுமுறை எண்ணிக்கையிட்டு அவை நாற்பத்தொன்பது ஆண்டுகள் ஆகும்.ஏழாம் மாதம் பத்தாம் நாள் எக்காள ஒலி எழட்டும் பாவக் கழுவாய் நிறைவேற்றும் அந்த நாளில் உங்கள் நாடெங்கும் எக்காளம் முழங்கச்செய்யுங்கள்.ஐம்பதாம் ஆண்டைத் தூயதாக்கி, நாட்டில் வாழ்வோருக்கெல்லாம் தன்னுரிமை அறிவியுங்கள். அது உங்கள் யூபிலி ஆண்டு அந்த ஆண்டில் நீங்கள் உங்கள் நிலப்பகுதிக்கும் உங்கள் இனத்தாரிடமும் திரும்ப வேண்டும். ஐம்பதாம் ஆண்டு உங்களுக்கு யூபிலி ஆண்டு அந்த ஆண்டு பயிரிட வேண்டாம் தானாய் விளைந்ததை அறுக்க வேண்டாம் கிளைநறுக்காத திராட்சைச் செடியினின்று கனி சேர்க்கவும் வேண்டாம். ஏனெனில், அந்த ஆண்டு யூபிலி ஆண்டு அது உங்களுக்குத் தூயது. நிலத்தினின்று அவ்வப்போது கிடைக்கும் பலனை உண்ணுங்கள்.அந்த யூபிலி ஆண்டில் அவரவர் தம் காணியாட்சிக்குத் திரும்பிச் செல்லவேண்டும்.உங்களுக்குள் ஒருவனுக்கு நிலத்தை விற்கவோ அவனிடத்தில் வாங்கவோ செய்யும்பொழுது ஒருவரை ஒருவர் ஏமாற்றாதிருங்கள்.யூபிலி ஆண்டிற்குப் பின், ஆண்டுகளைக் கணக்கிட்டு அவற்றின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாங்கலாம். பயன்படுத்தும் ஆண்டுகளுக்கு ஏற்ப அவன் அதை உனக்கு விற்கவேண்டும்.பலனைப் பயன்படுத்தும் ஆண்டுகள் எண்ணிக்கை மிகுந்திருந்தால் விலையை உயர்த்த வேண்டும் குறைந்திருந்தால் விலையைக் குறைக்க வேண்டும். ஏனெனில், பயனுள்ள ஆண்டுகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவே அவன் விற்கிறான்.உங்களுள் எவரும் தம் இனத்தாரை ஏமாற்றலாகாது. கடவுளுக்கு அஞ்சி நடங்கள்! ஏனெனில், நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர்!

**பதில்பாடல் :** கடவுளே மக்களினத்தார் உம்மைப் புகழ்ந்து போற்றிடுவர்

## நற்செய்தி : மத்தேயு14 : 1 -12

அக்காலத்தில் குறுநில மன்னன் ஏரோது, இயேசுவைப்பற்றிய செய்தியைக் கேள்வியுற்றான்.அவன் தன் ஊழியரிடம், ”இவர் திருமுழுக்கு யோவான்தான். இறந்த யோவானைக் கடவுள் உயிர்பெற்றெழச் செய்தார். இதனால்தான் இந்த வல்ல செயல்களை இவர் செய்கிறார்” என்று கூறினான்.ஏரோது தன் சகோதரனான பிலிப்பின் மனைவியாகிய ஏரோதியாவின் பொருட்டு யோவானைப் பிடித்துக் கட்டிச் சிறையில் அடைத்திருந்தான். ஏனெனில் யோவான் அவனிடம், ”நீர் அவளை வைத்திருப்பது முறையல்ல” என்று சொல்லிவந்தார்.ஏரோது அவரைக் கொலைசெய்ய விரும்பினான் ஆயினும் மக்கள் கூட்டத்தினர் அவரை ஓர் இறைவாக்கினர் எனக் கருதியதால் அவர்களுக்கு அஞ்சினான்.ஏரோதின் பிறந்த நாளில் ஏரோதியாளின் மகள் அவையினர் நடுவில் நடனம் ஆடி ஏரோதை அகமகிழச் செய்தாள்.அதனால் அவள் எதைக் கேட்டாலும் அளிப்பதாக அவன் ஒரு வாக்குறுதியை ஆணையிட்டு அறிவித்தான்.அவள் தன் தாய் சொல்லிக்கொடுத்தபடியே, ”திருமுழுக்கு யோவானின் தலையை ஒரு தட்டில் வைத்து இங்கேயே எனக்குக் கொடும்” என்று கேட்டாள்.இதைக் கேட்ட அரசன் வருந்தினான் ஆனாலும் தான் விருந்தினர் முன் ஆணையிட்டதால் அதை அவளுக்குக் கொடுக்கக் கட்டளையிட்டான். ஆள் அனுப்பிச் சிறையில் இருந்த யோவானின் தலையை வெட்டச் செய்தான்.அவருடைய தலையை ஒரு தட்டில் வைத்துக் கொண்டுவரச் செய்து அதைச் சிறுமியிடம் கொடுத்தான். அவளும் அதைத் தன் தாயிடம் கொண்டு சென்றாள்.யோவானுடைய சீடர் வந்து அவருடைய உடலை எடுத்துச் சென்று அடக்கம் செய்தனர் பின்னர் இந்நிகழ்ச்சியினை இயேசுவிடம் போய் அறிவித்தனர்.

**தியானம்:** இன்றைய வாசகத்தில் பிரதான நபரான குருகுல மன்னனான ஏரோது உண்மைக்கு சான்று பகர்ந்ததால், பொய்மையோடு சமரசம் செய்யாமல் வாழ்ந்ததால், உண்மையை எடுத்துரைத்து பொய்மையை கண்டித்ததால் கிடைத்த சம்பளம் “மரணம் “. ஏரோதின் பிறந்த நாள் திருமுழுக்கு யோவானின் விண்ணக பிறப்பு நாளாக மாறியது. நாம் எப்போதாவது ”கூண்டுக்கிளி” யாய் அடைபட்டு சிறைப்பட்டு நற்செயலைச் செய்ய ஆசைப்பட்டு செய்ய முடியாமல் போய் இருக்கின்றதா? இது தவறு என்று தெரிந்தும் நிர்ப்பந்தத்தின் காரணமாக செய்கின்றோமா ? ஏரோது திருமுழுக்கு யோவானை கொல்லாமல் விட்டு இருந்தால் என்ன நடந்திருக்கும்? அங்கிருந்த மக்களில் ஒரு சிலர் , ஏரோது ஒரு பொய்யன் என்றும் வார்த்தை தவறிவிட்டான் என்றும் ஏளனம் செய்திருப்பர். ஆனால் அதிக பட்சமானோர் அமைதியாக மனதிற்குள் கைதட்டி பாராட்டி இருப்பார்கள். சில நேரங்களில் நம்வாழ்க்கையில் நம்பின விசயங்களுக்காக வாழ்ந்து போராட வேண்டும். இது சுலபமில்லை. நம்மோடு இருந்து வேறுபாடு கொண்டவர்கள் எப்போதும் அதிகமாக இருப்பார்கள். .திருமுழுக்கு யோவானைக் கொன்றதால் தன்வாழ்நாள் முழுவதும் குற்ற உணர்வோடுதான் ஏரோது வாழ்ந்திருக்க வேண்டும். ஏரோதுக்கு தெரியும் நன்மை செய்ய அவனுக்கு துணிவும் உறுதியும் இல்லை என்று தன்பிற்கால அனுபவம் அவனுக்கு பாடம் புகட்டி இருக்க வேண்டும். இன்று நம்வாழ்வின் செயல்களை தீர்மானங்களை, தேர்ந்தெடுப்புக்களை ஆய்வு செய்ய அழைக்கப்பட்டு இருக்கின்றோம். இறைவன் நமக்கு ஆசீர் வழங்கட்டும் அறிவு தரட்டும்.